16th November 1957]

SRI N. K. PALANISAMI : ஸார், அந்த கவர்ன்மெண்ட் எஸ்டேடில் ஏற்கெனவே இருக்கக்கூடிய நல்ல கட்டிடத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் இந்தக் கட்டிடத்தைக் கட்டுவானேன் ? வேறு இடத்தில் ஏன் கட்டவில்லை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வேறு இடம் எங்கெங்கு கிடைக்குமென்று சுற்றிப் பார்த்துவிட்டு, இந்த இடம்தான் கிடைக்கக்கூடிய தாக இருந்ததால் இங்கு கட்டப்படுகிறது.

SRI M. KALYANASUNDARAM : இந்த ஹாஸ்டல் என்ன உபயோ கத்திற்காக கட்டப்படுகிறது? இதற்கு முன்பு இருந்த கட்டிடத்தை இடிக்க வேண்டியதன் அவசியம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கட்டிடம் அந்த இடத்தில் கட்டவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதால் பழைய கட்டிடம் இடிக்கப்பட்டது. இது பிரஸிடென்ஸி காலேஜ் யூனிவர்ஸிடி மாணவி களுக்காக கட்டப்படுகிறது.

Tax on agricultural income.

* 184 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Central Government have suggested recently to this Government the levying of a tax at uniform level on agricultural income; and

(*b*) if so, the steps taken by the Government in the matter?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : ஸார், இந்த விவசாய வருமான வரி, 1943-ம் வருஷத்தில் அட்வைஸராக இருந்த ஸ்ட்ராத்தி என்பவர், போட முடியும் என்று எழுதியிருக்கிறார். அதைப் பரிசீலனை செய்து போடுவதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்போது அந்த மாதிரி உத்தேசம் இருந்திருக்கலாம். இப்போது பிளேன்டேஷன்ஸ் இன்கம்டாக்ஸ் போட்டு எக்ஸ்பெரிமெண்ட் பண்ணுகிறோம்.

Closure of match factories in Madurai district.

* 185 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Eastern Match Factory, Ananda Match Factory and Diamond Match Factory in Tirumangalam of Madurai district have been closed since more than two months;

(*b*) if so, the number of workers affected by this closure; and

(*c*) the reason for the closure and the steps taken by the Government to re-open these factories?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Eastern Match Company has not been closed. The Ananda Match Company stopped production on 24th May 1957, but the workers were retained till 15th July 1957. The Diamond Match Company stopped production on 30th May 1957 but the workers were retained till 15th June 1957.

(*b*) Two hundred and fourteen workers in Ananda Match Company and 126 in the Diamond Match Company.

(*c*) The closure of Ananda Match Company is temporary. It is reported that the management are awaiting orders of the Central Excise authorities in the matters of granting them a fresh licence and that they hope to resume work in two or three weeks' time. The closure of Diamond Match Company is due to heavy loss. The workers have been paid retrenchment compensation and no complaint or representation has been received by the Labour Department or Government on any issue either before or after the closure.

SRI V. K. KOTHANDARAMAN : தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலே தொழிற்சாலைக்குத் தொழிற்சாலை கூலியில் வித்தியாசம் இருக்கின்ற காரணத்தால் இது போன்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் மாகாண ரீதியில் கூலி நிர்ணயம் செய்ய அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது அந்த யோசனை இல்லை.

* 186 *Q.*—SRI M. KALAYANASUNDARAM : Sir, I am not putting the question.

Ammonium sulphate.

* 187 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state the number of tons of ammonium sulphate allotted to the Coimbatore district for 1957–58?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 7,463 tons.

SRI P. G. MANICKAM : ஸார், கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு ஒதுக்கப் பட்டிருக்கும் அம்மோனியம் ஸல்பேட்டில் பாதிப் பங்கு ஹோல்ஸேல் டீலருக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்காமல் கோவாபரேடிவ் கிரடிட் சொஸைடி மூலமாகக் குடியானவர்களுக்கு வழங்க அரசாங்கத்தார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற முறைப்படி டெவலப்மெண்ட் பிளாக்கில் எல்லாம் பரிபூர்ணமாக கூட்டுறவு சங்கங்களின் மூலம் வினியோகிக்கப்படுகிறது. மற்ற பகுதிகளில் ஒரு பகுதி கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் இன்னொரு பகுதி சாதாரண டீலர் மூலமாகவும் வினியோகிக்கப்பட்டு வருகிறது.

Secondary grade teachers handling high school classes.

* 188 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that secondary grade trained teachers are handling the high school classes instead of graduate-trained teachers ; and

(*b*) if so, the steps taken to prevent unqualified persons handling higher classes?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, in rare cases.

(*b*) No special steps are necessary.